## மனுக்குலத்துடன் தேவன் ஏற்படுத்திக்கொண்ட புதிய உறவு
## NEW RELATIONSHIP OF GOD WITH MANKIND




பாடச்சுருக்கம்

**தேவன் மனுக்குலத்தை ஏன் சிருஷ்டித்தார், எதற்காக சிருஷ்டித்தார்:**

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் **ஜீவாத்துமாவானான்.** ஆதி. 2:7.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; **ஆணும் பெண்ணுமாக** அவர்களைச் சிருஷ்டித்தார். ஆதி. 1:27.

தம்முடைய குமாரன் **அநேக சகோரருக்குள்ளே** முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; ரோ.8:29.

**தேவனுடனான உடன்படிக்கை:**

ஆனாலும் **நன்மை தீமை அறியத்தக்க** விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் **சாகவே சாவாய்** என்று கட்டளையிட்டார். ஆதி. 2:17.

அப்பொழுது **சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி**: நீங்கள் சாகவே சாவதில்லை **தேவர்களைப் போல இருப்பீர்கள்.**ஆதி.3:4,5.

பின்பு தேவனாகிய கர்த்தர்: **இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்;** இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று ஆதி. 3:22

அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவ விருட்சத்துக்குப் போம் வழியை காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். ஆதி. 3:24.





**அறிமுகம்**

*இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும்,* ***எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும்*** *இதுவுமாயிற்று. ரோமர் 5:12.*

நாம் பார்த்த மூன்று பாடங்களிலும் நாம் கற்றுக்கொண்ட வேத வசனங்கள், ஆதாம் ஏவாள் தேவனுடனான உடன்படிக்கையை முறித்து விட்ட பிற்பாடு, வளர்ச்சியடைந்த எல்லா மனிதர்களுக்கும் நிகழ்ந்த மாற்றத்தை புரிந்துகொள்ள உதவிசெய்கின்றன. "நன்மை தீமை அறியத்தக்க அறிவு" நமக்கு இருக்கின்றது. ஆகையால் பின்வரும் புத்திமதிகளுக்குக் கட்டுப்பட்டு மனிதன் தினமும் வாழவேண்டியது அவசியம்.

***தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்.*** *ரோமர் 12:9.*

*நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. ரோமர் 12:21.*

***நீங்கள் நன்மைக்கு ஞானிகளும், தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று*** *விரும்புகிறேன். ரோமர் 16:19.*

*பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய* ***பூரண வயதுள்ளவர்களுக்கே*** *தகும். எபிரெயர் 5:14.*

வளர்ச்சியடைந்த எல்லா மனிதர்களுமே பாவம் செய்து தேவனை விட்டுப் பிரிந்துவிட்டபோதிலும் தேவன் மாறவில்லை. மனிதனை படைத்ததற்கான அவருடைய நோக்கமும் மாறவில்லை. இன்றும் ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய சாயலில் தான் படைக்கப்படுகிறான். நமது ஆவி தேவனிடமிருந்து வருகிறது, நமது ஆண் (அ) பெண் உடல் பூமியிலிருந்து வருகிறது. நம் ஒவ்வொருவருக்கும் தேவன் நியமித்துள்ள இயற்கையான தேவைகளை நிறைவுசெய்துகொள்ள நம்மைத் தூண்டும் உள்ளுணர்வுகளோடு நாம் பிறந்திருக்கிறோம். தேவன் மனுக்குலத்தோடு

இன்றும் உடன்படிக்கை செய்து கொண்டு, தமது நோக்கத்தை நிறைவேற்றுகிறார்.

ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறின பிற்பாடு மனுஷனும், மனுஷியும் நன்மை தீமை அறிந்துகொள்வதில் தேவனைப்போல் ஆனார்கள். நம்முடைய ஆவிக்கு நம்முடைய சிந்தனை என்னவென்று நன்றாகத் தெரியும். *1 கொரி. 2:11.* நம்மை நாமே சோதித்து அறிய முடியும். *2 கொரி. 13:5.* நாம் செய்யவேண்டியதை நாம் செய்யாமற் போனால், நம்முடைய மனச்சாட்சிக்குக் குற்ற உணர்வு உண்டாகும். இதன் விளைவாகவே தேவனுக்கும் மனிதனுக்குமான **உறவு** பாதிக்கப்பட்டது.

**பாடம்**

ஆதாம் முதல் மோசே வரைக்குமுள்ள மனிதர்களுடன் தேவன் தமது ஐக்கியத்தை எப்படி தொடர்ந்து நிலை நிறுத்தினார் என்பதை இப்பாடத்தில் அறிந்துகொள்வோம். இதைக் குறித்து எழுதும்படியாக பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலனாகிய பவுல் ஏவப்பட்டான். “மனுக்குலத்துடன் தேவன் ஏற்படுத்திக்கொண்ட புதிய உறவு” என்ற இப்பாடத்தலைப்புடன் இது சம்பந்தம் உள்ளதாய் இருக்கிறது.

*நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப் பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன். ரோமர் 5:13,14.*

நாம் வேத வசனங்களை வேதத்தின் அடிப்படையில் விளங்கிக்கொண்டால் மட்டுமே, இந்தப் பாடத்தில் நாம் பார்க்கப்போகும் காரியங்களை புரிந்துகொள்ளமுடியும். இந்தக் கதையில் முக்கியமானவ ராக தேவன் இருக்கிறார், எதிரியாக சாத்தான் இருக்கிறான். தம்முடைய ராஜ்யத்தில் பிள்ளைகளாக இருக்கும்படியாகவே மனுக்குலத்தை தேவன் உண்டாக்கினார். தேவனுடைய இந்த நோக்கம் “கர்த்தராகிய இயேசு





தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது” நிறைவேறும். *2 தெச. 1:8.* சீனாய் மலையில் மோசே பெற்றுக்கொண்ட உடன்படிக்கை பழமையானதும், நாள்பட்டதுமாயிருக்கிறதென்று எபிரெய ஆசிரியன் கூறுகிறான். *யாத்திராகமம் 19:2-6; எபிரெயர் 8:7-9,13.*

ஆதியாகமம் 1 முதல் யாத்திராகமம் 20:26 வரையிலான வேதாகம சம்பவங்களில் ஒரு முறை முட்டுமே சாத்தான் தோன்றி பேசியதாக பதிவு செய்யப்பட்டு உள்ளது. ஒரு சர்ப்பத்தின் வடிவிலேயே அவன் தோன்றினான். *ஆதி. 3:1-4.* “உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்” என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிட்டான். *வெளி. 12:9.* சாத்தானுடைய முதல் வேலை மிகவும் எளிமையானதாய் இருந்தது. அவன் ஏவாளை வஞ்சித்தான்; அவள் ஆதாமைத் தூண்டி தேவனுடைய உடன்படிக்கையை உடைத்துப் போடும்படி செய்தாள். *2 கொரி. 11:3; 1 தீமோ. 2:14; ஆதியாகமம் 3:17.* தீமைக்குப் பதிலாக நன்மையை தேர்ந்தெடுப்பதில் மனுக்குலம் தோல்வியடைந்துவிட்டதினால், தண்டனை தீர்மானிக்கப்பட்டுவிட்டது. “உலகமனைத்தையும் மோசம் போக்குவதற்கு” சாத்தானுடைய முதல் தாக்குதல் இது தான். ஒரு எதிரியாக சாத்தானுடைய வேலை இதோடு முடியவில்லை. ஆதாம் முதல் மோசே வரையிலான எல்லாரையும் மரணம் ஆண்டுகொண்டது. இயேசு கிறிஸ்துவானவர் வரும் வரையிலும் வாழ்ந்த மனிதர்கள் அனுபவித்திருக்க வேண்டிய “பயனுள்ள கனி தரும்” வாழ்க்கையை, இந்த மரண பயம் தொடர்ந்து அழித்துவந்தது. *2 பேதுரு 1:8.* இயேசு கிறிஸ்து மாம்சமாகி பூமியில் வாழ்ந்ததினால், “இந்தக் கடைசி நாட்களில்” மனிதருக்கு தேவனுடைய “கிருபையும் சத்தியமும்” கிடைத்திருக்கின்றன. *யோ. 1:17.*

*ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத் தையும், இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே*

*அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். எபிரெயர் 2:14,15.*

இந்தக் கதையில் முக்கியமானவராகிய தேவனுடைய செயல் உறுதி வாய்ந்ததாக இருக்கின்றது. தேவனிடமிருந்த வந்த "உள்ளான மனிதன்" ஒவ்வொருவருக்குள்ளும் இருப்பதினால், மனிதனுடைய நலத்தில் தேவன் அதிகமாக அக்கறைச் செலுத்துகிறார். தமது முன் குறிக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, மனிதன் மீது சாத்தானுக்குள்ள மரண அதிகாரத்தை அகற்றிவிடவேண்டும் என்று தேவன் விரும்பினார். *1 தீமோ. 2:3-6; 2 பேதுரு 3:9.* தேவன் தமக்குப் பிள்ளைகள் வேண்டும் என்று விரும்புகிறார், அடிமைகளோ, தேவதூதர்களோ, இயந்திரங்களோ அவருக்கு வேண்டியதில்லை. ஆகவே, அவருடைய உடன்படிக்கையின் கட்டளைகளையும், அவருடன் தனிப்பட்ட ஐக்கியத்தையும், ஏற்றுக்கொள்ளவோ (அ) நிராகரிக்கவோ ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை கொடுத்திருக்கின்றார். தேவன் பரிசுத்தராய் இருக்கிறார். தேவன் பரிசுத்தமான தன்மை உடையவராய் இருப்பதால், நீதி என்பது அவருடைய குணமாக இருக்கின்றது. *1 பேதுரு 1:15; எபிரெயர் 12:14.* தேவன் நீதியுள்ளவராக இருப்பதால், அவருடைய செயல்கள் நியாயமானவைக ளாக இருக்கின்றன. "சேனைகளின் கர்த்தர் நியாயத்தீர்ப்பினால் உயர்ந்து, பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார்." *ஏசாயா 5:16.* தங்கள் செயல்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளும் வயதை அடைந்த மனிதர்களின் நெருக்கடியான நிலைமையை யோவான் விவரிக்கிறான்.

*தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப் பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களா யிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர் களாயிருப்போம். 1 யோவான் 1:5,6.*





நன்மைக்குப் பதிலாகத் தீமையைத் தேர்ந்தெடுப்பது தான் மனுக்குலத்தின் பிரச்சனை. தேவனுடைய நீதி எப்படிப்பட்டது என்று கற்றுக்கொள்ளும் போது, நன்மையை தெரிந்தெடுக்கவேண்டிய பொறுப்பு நம்மிடம் இருக்கின்றது. சரி என்று நம்புகிற காரியங்களை நாம் செய்யவேண்டும், செய்யாமற்போனால், தேவன் நம்மிடம் கணக்குக் கேட்பார், மட்டுமல்ல நம்முடைய சொந்த மனச்சாட்சியும் நம்மைக் குற்றப்படுத்தும். *ரோமர் 2:15; யாக்கோபு 4:17.* வளர்ச்சியடைந்த எல்லா மனிதருக்கும் மனச்சாட்சி இருப்பதினால், அவர்கள் அதை மீறுகின்ற போது குற்ற உணர்வு உண்டாகின்றது. சிலருடைய மனச்சாட்சி கடினமாகிவிட்டது. சிலருடைய மனச்சாட்சி அசுத்தமாகிவிட்டது. சில தேவனுடைய பிள்ளைகளுடைய மனச்சாட்சி பெலவீனமாகிவிட்டது. *1 தீமோ. 4:1,2; தீத்து 1:15,16; 1 கொரி. 8:10; ரோமர் 14:23; எபேசியர் 4:17-19.* எது நல்லது எது கெட்டது என்று நிர்ணயம் செய்வதற்கு தேவனுடைய நீதியே மிகச் சரியான அளவு கோலாகும். "தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக." *ரோமர் 3:4.*

சிறு பிள்ளைகள் வாலிப வயதை அடையும் போது அவர்களுக்கும், அவர்களது பெற்றாருக்கும் இடையில் உள்ள உறவு எப்படியிருக்கின்றதோ, ஏறக்குறைய அதைப் போவே தேவனுக்கும், மனுக்குலத்துக்கும் உள்ள உறவும் இருக்கின்றது. அன்பான பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் என்ன விரும்புவார்களோ, அதையே தான் தேவன் தம் மக்களிடம் விரும்புகின்றார். பெற்றோர்களும் தேவனும் தங்கள் பிள்ளைகளிடமிருந்து விரும்புவது என்னவென்றால், தங்களைப் பெற்றவர்கள் என்ற மரியாதையோடு அவர்கள் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்பது தான். இரு பிரிவினருமே தங்கள் பிள்ளைகளின் தேவையைச் சந்தித்து, புகழ்ச்சிக்குரிய வாழ்க்கை எப்படி வாழவேண்டும் என்று போதிக்கிறார்கள். பிதாவாகிய தேவனும், பெற்றாரும் தங்கள் குடும்பத்தில் சந்தோஷம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இரு வித உறவுகளிலுமே வாலிப வயதில் உண்டாகும் மாற்றங்கள் தான் பிரச்சனைகளாய் இருக்கின்றன. வாலிபன் தன் மனதுக்குள்ளாகவே

எது சரி எது தவறென்று நம்புகிறானோ, அதற்குத் தகுந்தபடியாகவே நடந்து கொள்கிறான். அவர்களுடைய மனச்சாட்சி அவர்கள் நம்பிக்கைக்குத் தகுந்தபடி அவர்களுடைய செயல்களைக் குற்றப்படுத்தும் (அ) நியாயப்படுத்திக்கொள்ளும். இப்படித்தான் ஆதாம் முதல் மோசே வரைக்கும் மரணம் ஆண்டு கொள்ளத் தொடங்கியது. தேவனுடைய உடன்படிக்கை ஒரு பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது, ஆனால், இது மோசேயின் பிரமாணத்தைக் குறிக்கவில்லை. *ஆதி. 26:4,5.* புதிய உடன்படிக்கையோடு சம்பந்தப்பட்டது போன்ற ஜீவப் பிரமாணத்தையே இது குறித்தது. *மத்தேயு 7:29; ரோமர் 8:1,2; 1 கொரி. 9:21; கலாத்தியர் 6:2; எபிரெயர் 10:16.* இந்த தலைப்பைக் குறித்து மற்றொரு பாடத்தில் படிக்கலாம்; நம்முடைய சரீரங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட **இயற்கையின் நியதி** எந்த வகையைச் சார்ந்ததோ, அதே வகையைச் சார்ந்ததாகவே, நமது **ஆவிகளுக்காக** ஏற்படுத்தப்பட்ட **ஜீவப் பிரமாணமும்** இருக்கின்றது. இந்த இரண்டு பிரமாணங்களும் மீறுதலை கணக்கில் வைப்பதில்லை; இருப்பினும் மனப்பூர்வமாக இவைகளை மீறுபவர்களை மரணம் ஆண்டுகொள்கிறது.

குற்ற உணர்வுக்கு உள்ளானவர்கள் கனத்தையும், மகிமையையும் இழந்துவிடுகிறார்கள். நம்முடைய உள்ளான மனிதனுக்கு கனமும், மகிமையும் மிக முக்கியமான தேவைகளாக உள்ளன. இவைகளை போதுமான அளவுக்கு பெறமுடியாதபோது, மக்கள் துக்கப்படுகிறார்கள், இவர்கள் தேவனையும், தங்கள் பெற்றாரையும் மற்றவர்களையும் கூட துக்கப்படுத்துகிறார்கள், சாத்தானுடைய உலகத்தில் வாழ்கின்ற துக்கம் மிகுந்த மக்கள் நிறைவான சந்தோஷத்தை தேடிக்கொண்டேயிருக்கிறார் கள். இன்றும் இது நடந்துகொண்டு இருக்கிறது. இந்த உலகத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் தேவ சமூகத்தை விட்டுவிலகிப் போகிறார்கள். அவர்களில் அநேகர் அவரிடம் திரும்பவந்து சேரவில்லை. இப்பேர்ப்பட்டவர்களை தேவனும், பெற்றாரும், சமுதாயமும் சமாளிக்க வேண்டி உள்ளது. அவர்கள் தம்மோடு ஐக்கியம் கொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்க





வேண்டிய பொறுப்பு அவருடைய மக்களுக்குள்ளது. இந்த ஊழியத்தைச் செய்யும்படியாகவே சபைக்கு ஆணையிட்டார். *மத்தேயு 4:23; 28:18-20; 1 கொரி. 15:58; 1 பேதுரு 3:15.*

மேற்கண்ட விளக்கத்தின் அடிப்படையில் "மனுக்குலத்துடன் தேவன் ஏற்படுத்திக் கொண்ட புதிய உறவில்" உள்ள கஷ்டங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியும். தேவனும் மாறவில்லை, அவர் மனுக்குலத்தை படைத்ததற்கான நோக்கமும் மாறவில்லை. தேவனை தூஷிப்பவனாகிய சாத்தான் உள்ளே நுழைந்து, தேவன் மட்டுமே அடக்கி ஆளக்கூடிய அறிவாகிய நன்மை தீமை அறியத்தக்க அறிவை, மக்கள் யாவரும் பெற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டான். ஆதாம், ஏவாள் ஏதேன் தோட்டத்தில் இருந்த போது எப்பேர்ப்பட்ட ஐக்கியம் கொண்டிருந்தார்களோ, அந்த ஐக்கியத்திலிருந்து அவர்களை தூர தள்ளிவிட்டு, உலகில் தாம் படைத்த எல்லாவற்றையும் தேவன் அழிவுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆயினும், அவரது நோக்கம் மாறவில்லை. மனிதன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து என்றைக்கும் உயிரோடிராத படிக்குச் செய்யவேண்டும் என்று *ஆதி. 3:22*–இல் தேவன் அறிவித்து வெகு காலம் ஆனபிற்பாடு, ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்கு பின்வருமாறு எழுதப்பட்டது. மனிதன் "ஜீவ விருட்சத்துக்கு" போகாதபடி தடை செய்துவிட்ட பிற்பாடு, தேவன் மேற்கொண்ட முக்கியமான நடவடிக்கையை இந்த வசனம் விளக்குகின்றது. *ஆதி. 3:24.*

*மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக் கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத் திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக் குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக் கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது, அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப்*

*பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். ரோமர் 8:19-23.*

உலகில் தாம் படைத்த எல்லாவற்றையும் தேவன் அழிவுக்கு ஒப்புக்கொடுத்தது போலவே, நம்முடைய சரீரங்களையும் அழிவுக்கு ஒப்புகொடுத்துவிட்டார். *1 கொரி. 15:22.* சாத்தானுடைய ராஜ்யத்தில் இருக்கின்ற எல்லாரையும் மரண பயம் ஆட்சி செய்கின்றது. *எபேசியர் 2:1-3.* இந்தப் பாவிகள் எல்லாருடைய ஆவிகளும் தேவனிடமிருந்து வந்தவைகள், அவைகள் தேவ சாயல் உடையவைகள். அப்படியிருந்தாலும் கனம், மகிமை, புகழ்ச்சி, உடலுறவு, சமுதாய மற்றும் உடல் ரீதியான பாதுகாப்பு ஆகிய இயற்கையாய் அமைந்த தேவைகள், இந்த ஆவிகளுக்கும் உள்ளன. *மத்தேயு 6:22-34; ரோமர் 2:6-11; 1 கொரி. 7:3-5; 1 பேதுரு 1:7* பார்க்கவும். அவைகள் பிறந்தது முதல் இந்தச் சரீரங்களை விட்டு வெளியேறும் வரையிலும் இந்தத் தேவைகளை திருப்திசெய்துகொள்ளும் வழிகளை தொடர்ந்து தேடுகின்றன. தேவனுடைய மக்களாகிய நாம், நம்முடைய சரீரங்களை விட்டு வெளியேறின பிற்பாடு, நமது “உள்ளான மனிதனுடைய” தேவைகளை யெல்லாம் அவர் திருப்திப்படுத்துவார் என்று அவருடைய வாக்குத்தத்தங்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். *ரோமர் 8:24,25.*

இன்றைக்குள்ள உலக வாழ்க்கையை இது விவரிக்கின்றது. இதோடு கூட, ஆதாம் முதல் மோசே வரைக்கும் வாழ்ந்த மனிதர்களில் தேவனுடைய உடன்படிக்கைகளின் மீது விசுவாசம் வைக்காதவர்களின் சூழ்நிலையையும் இது விவரிக்கின்றது. ஆதாம் முதல் மோசே வரை நடந்த விவரங்களையெல்லாம் கவனிக்கும்பொழுது, தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் உள்ள புதிய உறவின் உண்மை நிலையை கிறிஸ்தவர்கள் பார்க்கமுடியும். ஆதியாகமம் 1-ஆம் அதிகாரம் முதல் யாத்திராகமம் 18-ஆம் அதிகாரம் 27 வரையிலான வசனங்களில் தேவனையும் பல தனி நபர்களையும் சம்பந்தப்படுத்தி தேவன் தெரிவிக்கும் விவரங்களை நாம்





சரியாகப் பார்த்து, மனதில் வைத்துக்கொள்ளும்போது, நம்முடைய விசுவாசம் உறுதியாகும். ஆதாம் முதல் மோசே வரைக்கும் வாழ்ந்தவர்களில் தேவனுடைய உடன்படிக்கைகளில் விசுவாசம் கொண்டு “விசுவாசத்தினால் நீதிமானாக்கும் கிருபையை” சார்ந்து வாழ்ந்தவர்கள் எவர்களோ, அவர்களை அவர் ஆசீர்வதித்தார் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். *எபிரெயர் 11:1-29.* மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தில் இந்த உபதேசம் கொடுக்கப்பட்டது. இதைக் குறித்து நாம் அடுத்த பாடத்தில் பார்ப்போம்.